புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2050 மார்ச் 7, 2019 புரட்சி 18 முழக்கம் 08 விலை: ரூ.3.00

## மறைக்க முடியாது; மக்கள் பாடம் புகட்டுவார்கள்

# தேசிய வெறிக்குப் பின்னால் பதுங்குகிறார், மோடி

அய்ந்தாண்டுகளாக கார்ப்பரேட்டுகளுக்காக சேவை செய்து மக்களை துன்பத்தில் ஆழ்த்தி மாபெரும் ரஃபேல் ஊழலையும் செய்துவிட்டு மாநில உரிமைகளை நசுக்கி விட்டு போர் வெறியையும், தேசிய வெறியையும் தேர்தலுக்காகத் தூண்டுகிறார் மோடி ! இந்த தேசிய வெறியின் பின்னால் பா.ஜ.க. மறக்கடிக்க முயல்வது.... எதை? எதை?



* ரஃபேல் விமான பேர ஊழல்.
* செல்லாத நோட்டில் செத்து மடிந்த உயிர்கள்.
* பண மதிப்பு நீக்கத்தால் நொடித்துப்போன தொழில்கள், இழந்த வேலைவாய்ப்புகள்.
* ஜி.எஸ்.டி. எனும் வரிவிதிப்பால் நிர்மூலமாகிப்போன தொழில் துறை.
* வேலை வாய்ப்பு வீழ்ச்சியில்1970-களின் நிலைமைக்கு சென்று விட்ட இந்தியா.
* நீட் தேர்வு என்ற பெயரில் நொறுக்கப்பட்ட ஏழை மாணவர் களின் மருத்துவ கனவு.
* அனிதாவின் உயிர்.
* ரிசர்வ் வங்கி, நிதி ஆயோக், சி.பி.அய்., தேர்தல் ஆணையம் உள்ளிட்ட அனைத்து நிர்வாக அமைப்புகளையும் காவி மயப்படுத்தியது.
* அமலாக்கத்துறை, வருமான வரித்துறையை அமித்ஷாவின் ஏவல்படையாக மாற்றியது.
* உச்சநீதிமன்ற நீதிபதிகளே பிரஸ் மீட் வைத்து கதறும் அளவுக்கு நீதித்துறையை சீரழித்தது.
* மாநிலக் கட்சிகளை மிரட்டி அடிபணியச் செய்து, கடைசியில் கட்சியையே கபளிகரம் செய்து, அடுத்தவன் கட்சி ஆபீஸில் வெட்கமின்றி தன் கட்சித் தலைவர் படத்தை வைத்துக் கொள்வது.
* எட்டு வயது பெண் குழந்தையை கோயிலுக்குள் வைத்து கூட்டு பாலியல் வல்லுறவு செய்த கொடூரர்களுக்கு ஆதரவாக ஊர்வலம் போன பா.ஜ.க.வின் கேவலம்.
* மாட்டுக்கறி சாப்பிடுவதை கொலைக்குற்றம் போல சித்தரித்த மக்கள் விரோத நடவடிக்கை.
* அக்லக் உள்ளிட்ட மாட்டிறைச்சி வைத்திருந்ததாக சொல்லி நிகழ்த்தப்பட்ட இந்து மதவெறி கும்பல்களின் கொலைகள்.
* கவுரி லங்கேஷ், கல்புர்கி, பன்சாரே, தபோல்கர் என எழுத்தின் வழியே சமூக மாற்றத்துக்காக உழைத்தவர்களை இந்துத்துவ கும்பல் சுட்டுக் கொன்றது.
* அமித்ஷா வழக்கை விசாரித்த நீதிபதி லோயா சுட்டுக் கொல்லப்பட்டது.
* உலகப் புகழ்பெற்ற வழக்கறிஞர் சுதா பரத்வாஜ், கவுதம் நவ்லகா, அருண் பெரைரா, கன்சால்வேஸ், வரவரராவ் ஆகிய இந்தியாவின் முக்கியமான மாற்றுக் குரல்களை மனித உரிமைப் போராளிகளை அப்பட்டமான போலி வழக்குகளில் நகர்ப்புற கொரில்லா என்ற பெயரில் கைது செய்தது.
* தலித் சிந்தனையாளர் ஆனந்த் டெல்டும்டே மீதான தொடரும் நெருக்குதல்கள்.
* பள்ளிக் கல்வித்துறை தொடங்கி உயர் கல்வித்துறை வரையிலும் அனைத்தையும் காவிமயப்படுத்தியது.
* மினிமம் பேலன்ஸ் இல்லை என்று ஏழைகளின் வங்கிக் கணக்குகளில் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட பல நூறு கோடி ரூபாய்.
* மல்லையா, நீரவ் மோடி உள்ளிட்ட வெளிநாட்டுக்கு தப்பி ஓடிய குஜராத் பனியா கும்பலுக்கு கொடுக்கப்பட்டு, வாராக் கடனாகிப்போன சுமார் பல்லாயிரம் கோடி ரூபாய்.
* 5 மற்றும் 8ஆம் வகுப்புக்கு பொதுத் தேர்வு எனும் அநியாயம்.
* மக்களின் எதிர்ப்பையும் கடந்து மீண்டும், மீண்டும் ஹைட்ரோ கார்பன் கிணறுகளுக்கு வழங்கப்படும் புதிய உரிமங்கள்.
* காவிரி மேலாண்மை வாரியத்தில் தமிழ்நாட்டை கழுத்தறுத்தது.
* தொழிலாளர் நலச் சட்டங்களை ஒழித்துக்கட்டியது.
* உயர்சாதி ஏழைகள் எனும் அரிய வகை ஏழைகளுக்கு 10% இட ஒதுக்கீடு வழங்கியது.
* இந்தியா முழுக்க பா.ஜ.க. ஆளாத மாநிலங்களில் ஆளுநர் மூலம் ஓர் இணை அரசாங்கத்தை நடத்த முயல்வது.
* அருவருப்பான, ஆபாசமான போலி செய்திகளையும் தப்பு தப்பான வரலாறுகளையும் எந்த கூச்சமும் இல்லாமல் தினம்தோறும் பேசுவது.
* சபரிமலை உள்பட பெண்களின் வழிபாட்டு உரிமையை, சுப்ரீம் கோர்ட்டே சொன்னாலும் கூட மதிக்காத திமிர்த்தனம்.
* ரூ.3000 கோடியில் படேல் சிலை, ரூ.15 லட்சத்தில் கோட் அணியும் ஏழைத் தாயின் மகன்!

- இவை அனைத்தையும் போர்வெறியின் பின்னால் மறைத்து விடலாம் என பா.ஜ.க நினைக்கிறது.

**– பாரதி நம்பி (இணையத்திலிருந்து)**

## அதானி குழுமத்திடம் 5 விமான நிலையங்களை தாரை வார்க்கும் மோடி: கேரள அரசு எதிர்ப்பு

திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலையம் உள்பட 5 விமான நிலையங்களை அதானி குழுமத்திடம் ‘தாரை’ வார்த்துவிட்டது மோடி ஆட்சி. கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலையத்தை அதானி குழுமத்துக்கு வழங்குவதை எதிர்த்து மோடிக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

“இந்த விமான நிலையம் கட்டுவதற்காக 635 ஏக்கர் நிலத்தை கேரள அரசு இலவசமாக வழங்கியிருக்கிறது. 2005ஆம் ஆண்டும் விமான நிலையத்தை விரிவாக்க மேலும் 23.57 ஏக்கர் நிலத்தை அளித்தோம்.

விமான நிலையத்தை அரசு தனியாருக்குத் தர முடிவெடுத்தால் மாநில அரசைக் கலந்து ஆலோசிக்க வேண்டும். மாநில அரசு இலவசமாக வழங்கிய நிலத்துக்கு உரிய இழப்பீடு தர வேண்டும் என்று மாநில அரசு ‘இந்திய விமான நிலையத்துக்கான குழுமத்துடன்’ ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்தத் துறையில் எவ்வித முன் அனுபவமும் இல்லாத அதானி குழுமத்துக்கு திருவனந்தபுரம் விமான நிலையத்தை கையளிப்பதை ஏற்க முடியாது. அப்படி விமான நிலையத்தை கை கழுவ நடுவண் ஆட்சி முடிவெடுத்துவிட்டால் தனியாருக்குக் கொடுக்காமல் கேரள மாநில தொழில்துறை வாரியத்திடம் ஒப்படையுங்கள். எங்கள் மாநில வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்” என்று கேரள முதல்வர் கடிதம் எழுதியிருக்கிறார்.

மோடியின் செல்லப் பிள்ளை அதானியை கொழுக்க வைத்துப் பார்ப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டி வரும் ‘சுதேசிப் பற்றாளர்’ மோடி, கேரள அரசின் இந்த நியாயமான உரிமைக் குரலுக்கு என்ன பதில் கூறப் போகிறார்?

## வடிவேலு காமெடி படம் வந்து ரொம்ப நாளாச்சுப்பா!

தமிழகமே மோடியின் பக்கம் திரண்டு நிற்கிறது, என்கிறார் துணை முதல்வர் ஓ. பன்னீர்செல்வம். அந்தக் கட்சிக்கு அவர்கள் ஒதுக்கியிருக்கிற சீட்டுகள் 5 மட்டும் தான்.

"இதுவே எங்கள் கட்சிக்கு ரொம்ப ரொம்ப அதிகம்" என்று மகிழ்ச்சிக் கூத்தாடிக் கொண்டிருக்கிறது பா.ஜ.க. வட்டாரம்.

ஜி.எஸ்.டி. வரியானாலும், புயல், இயற்கை சீற்றப் பேரிடர் நிவாரண நிதியானாலும் தமிழகத்துக்கு தர வேண்டிய நிதியை நடுவண் ஆட்சி தரவில்லை என்று பட்ஜெட் உரையில் பட்டியலிட்டார் முதல்வர் எடப்பாடி!

அரசுகளுக்கிடையிலான உறவுகளைத் தவிர, அ.இ.அ.தி.மு.க.வுக்கும் - பா.ஜ.க.வுக்கும் கட்சி ரீதியாக உறவுகள் கிடையாது என்று நேற்று வரை பேசினார்கள்; பேட்டி அளித்தார்கள்.

பா.ஜ.க.வை நாங்கள் ஏன் தூக்கி சுமக்க வேண்டும் என்று கேட்டவர், நாடாளுமன்ற துணை சபாநாயகர் அ.இ.அ.தி.மு.க. எம்.பி. தம்பித் துரை!

இப்போது அதே கட்சியைத் தலையில் தூக்கிச் சுமக்கத் தொடங்கிவிட்டார்கள். தமிழகம் முழுவதும் தலையில் மோடியைத் தூக்கிக் கொண்டு வரப் போகிறார்கள்.

காவிரிப் பிரச்னையில், நீட் பிரச்னையில், ஸ்டெர்லைட் ஆலைப் பிரச்னையில், ஜி.எஸ்.டி. வரிப் பிரச்னையில் மேகதாது அணைப் பிரச்னையில் என்று தமிழ்நாட்டு மக்களை 'வஞ்சம் தீர்த்த' மோடியை தலையில் சுமந்து வருகிறோம். மோடியின் ஆட்சியை மீண்டும் கொண்டு வர, வாக்களிப்பீர் என்று கூவிக் கூவி மோடியை சுமந்து வரப் போகிறார்கள்.

இந்தக் காட்சிகளை கைதட்டி சிரித்து சிரித்து ரசிக்க வாக்காளர்களும் காத்திருக்கிறார்கள். ஆமாம்! வடிவேலு படங்கள் வந்து வெகு நாளாகிவிட்டது மக்கள் 'காமெடிக்காக' ஏங்கித் தவித்து நிற்கிறார்கள்.

### கூட்டணிக்கு திகில் நிறைந்த திரைக் கதைகள்

மோடி ஆட்சிக்கு எத்தனை மார்க் போடுவீர்கள் என்று மருத்துவர் இராமதாசிடம் 'நியூஸ் 18' தொலைக் காட்சி பேட்டியில் கேட்டபோது 'சைபர்' மார்க்குக்கும் கீழே போடுவேன் என்றார், மருத்துவர் இராமதாஸ்.

'கழகங்களின் கதை' என்று எடப்பாடி ஆட்சியின் ஊழல்களைத் தொகுத்து நூலாக்கி, ஆளுநரிடம் தந்து ஆட்சியின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரியதும் அதே பா.ம.க.தான்!

இவையெல்லாம் 5 ஆண்டுகள் முன்போ, 2 ஆண்டு களுக்கு முன்போ நடந்தவை அல்ல; சில மாதங்களுக்கு முன்னால்!

இப்போது மீண்டும் மோடி ஆட்சியே வரவேண்டும் என்று வாக்கு கேட்க வருகிறது பா.ம.க. மோடி எடப்பாடி ஆட்சி தொடர வாக்களியுங்கள் என்று கூட்டணியில் ஒன்று சேர்ந்து 'கோரஸ்' பாடுகிறது. இதை நியாயப் படுத்த அவர்கள் என்னவெல்லாம் பேசுகிறார்கள்.... அப்பப்பா... காதில் புகை வருகிறது!

"அதே பா.ஜ.க., அ.தி.மு.க.வுடன் நாங்கள் கைகோர்த் திருப்பது இழந்த உரிமைகளை மீட்பதற்குத்தான். வெளியி லிருந்து கொடுத்தக் குரலை கூட்டணியில் இணைந்து வலியுறுத்தவிருக்கிறோம்" என்கிறார் அன்புமணி.

எடப்பாடியின் எட்டு வழிச் சாலை விரிவாக்கத்துக்கு நிலம் பறித்தபோது கதறியழுத மக்களிடம் போய் கூறிப் பாருங்கள்! மீண்டும் எடப்பாடியும் மோடியும் ஆட்சிக்கு வரவேண்டும்; அப்போதுதான் எட்டு வழிச் சாலைத் திட்டத்தை நிறுத்த முடியும் என்று!

நீட் தேர்வில் பாதிக்கப்பட்ட பல்லாயிரம் கிராமப்புற மாணவர்களிடம் போய் சொல்லிப் பாருங்கள்! மீண்டும் மோடிதான் பிரதமராக வேண்டும்; அப்போதுதான் 'நீட்'டை தடுத்து நிறுத்த முடியும் என்று! அப்போது தெரியும் உங்கள் கதை!

இப்படி எல்லாம் மக்கள் காதுகளில் பூ சுற்ற முடியாது; வாக்காளர்கள் இப்போது நிறையவே விழிப்படைந்து விட்டார்கள்.

எப்படி திரைக்கதைகளை நீங்கள் எழுதினாலும் நீங்கள் ஒட்டக்கூடிய 'ரீல்'களில் மக்கள் ஏமாறப் போவது இல்லை.

## பா.ஜ.க. ஆட்சியை எதிர்த்து ஈரோடு மாவட்டக் கழகம் தீவிரப் பிரச்சாரம்

சமூகநீதிக்கும், ஒடுக்கப்பட்டோருக்கும் எதிராக கூட்டாட்சி நடத்திவரும் பாசிச பாஜகவின் கொடூரத் திட்டங்களை மக்களிடையே எடுத்துரைக்கும் விதமாக திவிக ஈரோடு தெற்கு மாவட்டத்தின் சார்பாக பவானி சாலையிலுள்ள மாயவரம் பகுதியில் 24.2.2019 ஞாயிறு மாலை தெருமுனைக்கூட்டம் நடைபெற்றது. சி.எம். நகர் பிரபு தலைமையேற்க, சீ.ரா .சௌந்தர், பி. கிருஷ்ணமூர்த்தி உரைக்குப் பிறகு வீரா கார்த்தி சிறப்புரையாற்றினார். கு. சண்முகப்பிரியன் நன்றியுரையாற்றினார்.

நிகழ்ச்சிக்கு இடம் தெரிவு செய்தும், மின்சாரம் வழங்கியும், நிகழ்ச்சி முடிந்தபின் தோழர்களுக்கு தேநீர் வழங்கியும் பெரிதும் தோழமை பாராட்டி நின்றார் ஆதித்தமிழர் முன்னேற்றக் கழகத்தினைச் சார்ந்த இராமகிருஷ்ணன் மற்றும் கிருஷ்ணமூர்த்தி இருவரும்.

நிகழ்வில் கலந்து கொண்டத் தோழர்கள் : ஜெய பாண்டி, விஜயகுமார், பிடல் சேகுவேரா, சத்யராஜ், குமார், கமலக்கண்ணன், கிருஷ்ணன், பிரபு, விஜயரத்தினம், எழிலன். கூட்டத்தின் முடிவில் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. மத்திய பி.ஜே.பி. அரசின் மக்கள் விரோதப் போக்கை மக்களிடையே கொண்டு செல்லும் விதத்தில் தொடர் பரப்புரை செய்வதென தீர்மானிக்கப்பட்டது.

## முகிலன் எங்கே? சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம்




ஸ்டெர்லைட் படுகொலை குறித்த ஆவணங்களை கடந்த பிப்ரவரி 15 அன்று வெளியிட்ட சூழலியல் போராளி முகிலன் அன்றிரவே காணமல் போனார். அவரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தமிழக அரசின் மெத்தனப் போக்கைக் கண்டித்து, "தோழர் முகிலன் எங்கே? தமிழக அரசே பதில் சொல்!" என்ற முழக்கத்தோடு 27.2.2019 அன்று மாலை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தோழர் முகிலன் காணாமல் போனதற்கு எடப்பாடி அரசும், காவல்துறையுமே பொறுப்பு என்ற கண்டன முழக்கங்களோடு துவங்கிய ஆர்பாட்டத்தில், மே பதினேழு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அருள்முருகன் துவக்க உரையாற்றினார்.

தொடர்ந்து, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் ஆளூர் ஷாநவாஸ், தமிழர் விடுதலைக் கழகம் சௌ.சுந்தரமூர்த்தி, டிசம்பர் 3 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தீபக், தமிழ்ப் புலிகள் கட்சியின் தலைவர் நாகை. திருவள்ளுவன், எஸ்.டி.பி.அய். கட்சியின் மாநில பொதுச் செயலாளர் ஆ.சா.உமர் பாருக், தமிழர் விடியல் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் டைசன், விடுதலை தமிழ்ப் புலிகள் கட்சித் தலைவர் குடந்தை அரசன், பச்சைத் தமிழகம் கட்சி அருள், ஆதித் தமிழர் கட்சி துணைப் பொதுச்செயலாளர் திருமுருகச்செல்வன், திராவிடர் விடுதலைக் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்ட செயலாளர் இரா. உமாபதி, மார்க்சிய பெரியாரிய பொதுவுடமைக் கட்சி பெரியசாமி, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் தலைமைக் கழகப் பேச்சாளர் பிஸ்மில்லா கான், மக்கள் பாதை உமர் முக்தார், தமிழக தேசிய முன்னணித் தலைவர் பொழிலன், தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கோவை இராமகிருஷ்ணன், திருமுருகன் காந்தி (மே 17) ஆகியோர் உரையாற்றினர்.

## கவிஞர் கலி. பூங்குன்றனுக்கு கழக சார்பில் கொளத்தூர் மணி வாழ்த்து




23.02.19 அன்று செஞ்சியில் 'பெரியார் அன்றும் இன்றும்' என்ற தலைப்பில் கருத்தரங்கு பெரியார் சாக்ரட்டீஸ் (மாவட்ட செயலாளர்) தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழகத் தலைவர் பூஆ.இளைய ராசன் வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியில் பழங்குடி மக்கள் முன்னணி சுடரொளி சுந்தரம், த.மு.மு.க. சையத் உசேன், அம்பேத்கர் மக்கள் கட்சி மழைமேனிப் பாண்டியன் , விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மண்டல செயலாளர் வெற்றிச்செல்வன், சி.பி.அய் வட்டச் செயலாளர் செல்வராசு, வர்த்தக சங்க விழுப்புரம் மாவட்டச் செயலாளர் கண்ணன், மதிமுக துணைப் பொதுச் செயலாளர் ஏ.கே மணி மற்றும் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ். மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். நிறைவுரையாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்ச்சி தொடங்கும்போது ஒரு மகிழ்ச்சியான தகவல் வந்துள்ளது திராவிடர் கழகத்தின் அடுத்தத் தலைவராக கவிஞர் கலி.பூங்குன்றன் அவர்களை திராவிடர் கழகத் தலைவர் தஞ்சையில் நடக்கும் மாநாட்டில் அறிவித்துள்ளார். எனவே கவிஞர் கலிபூங்குன்றன் அவர்களுக்கு நம் அனைவரின் சார்பாகவும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வோம் என்று அறிவித்தார். தொடர்ந்து 'பெரியார் அன்றும் இன்றும்' என்ற தலைப்பில் இன்றைய அரசியல் அன்றைய அரசியல் சூழலை பொருத்தி விரிவான ஆழமான பெரியாரின் கொள்கைப் பயணத்தை எடுத்துரைத்துப் பேசினார். மதியம் 2.30 மணியளவில் நிகழ்ச்சி திண்டிவனம் நகரப் பொறுப்பாளர் சிந்தனை சிற்பி நன்றியுடன் நிறைவு பெற்றது.

# ஒரே சிறையில் பெரியாரும் அண்ணாவும்

22.9.2018 அன்று பெரம்பூரில் வடசென்னை மாவட்டக் கழகம் நடத்திய கருத்தரங்கில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் 'பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள்' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையின் விரிவாக்கம்.

பொன்மொழி நூலைப் பறிமுதல் செய்து, பெரியாருக்குத் தண்டனை வழங்கி, அவரது வாகனத்தையும் ஏலம் விட்ட அரசின் அடக்கு முறையை எதிர்த்து, கருஞ்சட்டைத் தோழர்கள் பொங்கி எழுந்தனர். தமிழ்நாடு முழுதும் கண்டனக் கூட்டங்கள் போராட்டங்கள் வெடித்தன. தீர்ப்பு வெளியான அன்றே ஈரோட்டில் கண்டனக் கூட்டம் சுவரொட்டி இயக்கங்கள் தொடங்கி விட்டன. சென்னையில் தொடர்ந்து ஒரு வாரம் கண்டனக் கூட்டங்கள் அறிவிக்கப் பட்டன. சென்னை ராபின்சன் பூங்காவில் நடந்த கண்டனக் கூட்டத்தில் எஸ். இராம நாதன், சாமி சிதம்பரனார், 'சண்டே அப்சர்வர்' பி. பால சுப்பிரமணியம், குத்தூசி குருசாமி கண்டன முழக்கமிட்டனர். பார்ப்பன ஏடுகளான 'ஹிந்து', 'சுதேச மித்திரன்' தீயிட்டு எரிக்கப் பட்டன. கிளர்ச்சியில் ஈடுபட்ட திராவிடர் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். அரசின் கொடூரமான அடக்குமுறைகள் மக்கள் மன்றத்தில் அம்பலமானது. எதிர்ப்புகளை சமாளிக்க முடியாத நிலையில் அரசு பத்து நாட்களிலேயே பெரியாரை விடுதலை செய்தது (28.9.1950).

ஈரோட்டில் 15.10.1950 அன்று பெரியாருக்கு பாராட்டுப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் பேசிய பெரியார் எந்த சூழ்நிலையில் விடுதலை செய்யப்பட்டேன் என்பதை விளக்கினார். "நான் ஆறு மாதம் தண்டிக்கப் பட்டு இருந்தாலும் பத்தே நாளில் விடுதலை யடைந்தேன்; அப்படி விடுதலை அடைந் தததற்கு யாரையாவது பாராட்ட வேண்டும் என்றால் உங்களைத்தான் பாராட்ட வேண்டும். ஏனென்றால் உங்களின் கிளர்ச்சியின் காரண மாகத்தான், என்னை சிறையில் வைத்திருந்தால் வெளியில் கிளர்ச்சி நடந்து கொண்டுதான் இருக்கும் என்று சர்க்கார் கருதி என்னை விடுதலை செய்தார்கள். இது சாதாரணமான தல்ல; 30 வருஷமாக தமிழ்நாட்டின் அரசியல் பொது வாழ்வு பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். எந்தக் காலத்திலும், எப்போதும், எந்தத் தலை வருக்கும் இது மாதிரி, அதாவது மக்கள் செய்த கிளர்ச்சியினால், சிறையி லிருந்து விடுதலை கிடைத்ததில்லை" என்று குறிப்பிட்டார்.

அதே உரையில் மற்றொரு தகவலையும் பெரியார் வெளியிட்டார். "எனக்குக் கிடைத்த இரகசிய செய்திப்படி 'இந்து', 'சுதேச மித்திரன்' பத்திரிகை ஆசிரியர்களும், சட்டசபை மெம்பர்களும், போலீஸ் அதிகாரிகளும், என்னை விடுதலை செய்தால் தான் நிலைமையை சமாளிக்க முடியும் என்று கூறியதன் பேரில்தான் விடுதலை செய்யப் பட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. உடனே மந்திரி சபை 3 மணிக்குக் கூடி 3.15 மணிக்கு என்னை விடுதலை செய்து விடலாம் என்று முடிவு செய்து, 4 மணிக்கெல்லாம் ஜெயிலுக்கு தந்தி அடித்து விட்டார்கள்" என்று பெரியார் குறிப்பிட்டார். அந்த அளவுக்கு திராவிடர் கழகத்தின் வலிமையும் பெரியாருக்கு மக்கள் செல்வாக்கும் இருந்தது. சென்னை மாநில அரசு அறிக்கை ஒன்றை வெளியிட்டது. "கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்ட வில்லை" என்ற கிராமத்துப் பழமொழிபோல் இருந்தது அந்த அறிக்கை. வடநாட்டாரையும் பார்ப்பனர்களையும் பெரியார் எதிர்த்து வகுப்புவாதத்தைத் தூண்டி விடுவதை அரசு பொறுத்துக் கொள்ளாது என்றெல்லாம் 'வீரம்' பேசிய அந்த அறிக்கை கடைசியில், "ஆனாலும் சிறையில் வைக்க வேண்டிய அவசியம் இல்லை" என்று அரசு கருதுவதாக இறுதி வாக்கியமாக சேர்த்து வெளியிடப்பட் டிருந்தது அந்த அறிக்கை.



1949ஆம் ஆண்டு தி.மு.க. பிரிந்த அடுத்த ஆண்டிலேயே பெரியாரும் அண்ணாவும் ஒரே சிறையில் அடைக்கப்பட்டிருந்த வரலாற்று நிகழ்வு அது.

இந்தப் போராட்டத்தில் மற்றொரு முக்கிய வரலாற்று நிகழ்வும் இணைந்திருந்ததை இளைய சமுதாயத்தின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டியது மிகவும் அவசியம். திராவிடர் கழகத்திலிருந்து தி.மு.க. 1949ஆம் ஆண்டு பிரிந்தது. ஓராண்டு காலத்தில் 1950ஆம் ஆண்டில் இந்த அடக்குமுறை நடந்தது. திராவிடர் கழகமும், தி.மு.கழகமும் கடும் பகை பாராட்டிய காலகட்டம் அது. பெரியாரின் 'பொன்மொழிகள்' நூலை தடை செய்த அதே நேரத்தில் அண்ணாவின் 'ஆரிய மாயை' நூலையும் அரசு தடை செய்தது. பெரியார் மீது சுமத்தப்பட்ட அதே குற்றச் சாட்டுகள் அண்ணாவின் மீதும் சுமத்தப் பட்டன. அண்ணாவும் பெரியாரைப் போல அபராதம் கட்ட மறுத்து சிறையேகினார். இருவருமே திருச்சி சிறையில் அடைக்கப்பட் டிருந்தனர்.

இருவரும் ஒரே நாளில் விடுதலை செய்யப் பட்டனர். அரசு வெளியிட்ட அறிக்கையும் இரண்டு பேரின் விடுதலையையும் சுட்டிக் காட்டியது. பெரியாருடன் சிறையிலிருந்ததைக் குறித்து அண்ணா விடுதலை பெற்றவுடன் நெகிழ்ச்சியுடன் ஒரு கட்டுரை தீட்டினார்.

*"திருச்சியில் எனக்குக் கிடைத்த வாய்ப்பு எப்படிப்பட்டது தெரியுமா தம்பி! பெரியாரும் அதே நாளில் அதே விதமான தண்டனை பெற்ற அதே சிறைக்கு வந்தார்.*

*'ஆரிய மாயை' என்னும் ஏடு தீட்டிய தற்காக எனக்குச் சிறை.*

*'பொன்மொழிகள்' தீட்டியதற்காகப் பெரியாருக்குச் சிறை.*

*திருச்சி கோர்ட்டாருக்கு இப்படியொரு காட்சியைக் காண வேண்டுமென்று ஆசை போலும்! இரண்டும் தனித் தனி வழக்குகள்; தனித் தனியாகத்தான் விசாரணைகள்; எனினும் தீர்ப்பு மட்டும் ஒரே நாளில், ஒரே நேரத்தில் அளிக்கப்பட்டது. பிரிந்து நெடுந்தூரம் வந்துவிட்ட என்னை, அன்று அந்தக் கோர்ட்டில் பெரியாருக்குப் பக்கத்திலே நிற்கச் செய்து, வேடிக்கை பார்த்தது வழக்கு மன்றம். போலீஸ் அதிகாரிகள் அதைத் தொடர்ந்து ஒரே வேனில் ஏற்றிச் சென்றனர். அதைத் தொடர்ந்து திருச்சி மத்தியச் சிறையிலே இருந்த அதிகாரி, பெரியார் கொண்டு வந்திருந்த சாமான்களைக் கணக்குப் பார்த்துச் சரியாக இருக்கிறதா என்று கூறும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார். என் வாழ்க்கையில் நான் மறக்க முடியாத சம்பவம். எனக்கு உள்ளூர பயம். கேள்விக் கணையுடன் நிறுத்திக் கொள்ளாமல் அன்புக் கணையையும் ஏவினால் என்னால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும் என்றெல்லாம் அச்சப்பட்டேன்.*

பக்கத்துப் பக்கத்து அறை; பகலெல்லாம் திறந்துதான் இருக்கும்; பலர் வருவார்கள்; இங்கு சிறிது நேரம்; அங்கு சிறிது நேரம்; இன்னும் சிலர் கூர்ந்து கவனித்தபடி இருப்பார்கள், நாங்கள் இருவரும் பேசிக் கொள்கிறோமோ என்று. அவர் அறைக்கு உள்ளே இருக்கும்போது நான் வெளியே மரத்தடியில்! அவர் வெளியே வர முயற்சிக் கிறார் என்று தெரிந்ததும் நான் அறைக்கு உள்ளே சென்று விடுவேன்.

இப்படிப் பத்து நாட்கள்.

நாளைய தினம் எங்களை விடுவிக் கிறார்கள் - முன் தினம் நடுப்பகலுக்கு மேல் ஓர் உருசிகரமான சம்பவம் நடைபெற்றது. பெரியாருக்கு வேலைகள் செய்து வந்த 'கைதி' என் அறைக்குள் நுழைந்து, 'அய்யா தரச் சொன்னார்' என்று சொல்லி, என்னிடம் ஆறு பிஸ்கட்டுகள் கொடுத் தான். கையில் வாங்கியதும் என் நினைவு பல ஆண்டுகள் அவருடன் இருந்தபோது கண்ட காட்சிகளின் மீது சென்றது.

மறுநாள் திடீரென்று விடுதலை கிடைத்தது. அந்த வேடிக்கையும் கேள், தம்பி! எங்களை விடுதலை செய்யப் போகிறார்கள் என்ற செய்தி உள்ளே எங்களுக்குத் தெரிவதற்கு முன்பே வெளியே தெரிந்து விட்டிருக்கிறது. எனவே, எங்களை அழைத்துச் செல்ல நண்பர்கள் வெளியே ஏற்பாடுகள் செய்யத் தொடங்கிவிட் டிருந்தனர். நமது (தி.மு.) கழகத்தார் ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டு நேரத்தை மறந்து விட்டனர்; எனவே சிறைக் கதவு திறக்கப் பட்டு எங்களை வெளியே அனுப்பியதும் வாசற்படியருகே பெரியாரை அழைத்துச் செல்ல வந்தவர்கள் கொண்டு வந்த மோட்டார்தான் இருந்தது. அதற்கு என்னையும் அழைத்துச் சென்றனர். இது போதாதென்று போட்டோ எடுப்பவர் ஒருவர் ஓடி வந்தார். 'இருவரும் அப்படியே நெருக்கமாக நில்லுங்கள்' என்று போட்டோ எடுத்துவிட்டார். அது வெளி யிடப்படவில்லை... வேதாசலம் அவர்கள் வீடு வரையில் சென்று அவர் இறங்கிக் கொண்டார். நான் அதே மோட்டாரில் சாம்பு இல்லம் சென்றேன்" என்று நெகிழ்ச்சியுடன் எழுதினார் அண்ணா.

பிறகு, 'பொன்மொழிகள்', 'ஆரிய மாயை' மீதான தடை நீக்கப்பட்டது. பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி தமிழக அரசு நியமித்த விழாக்குழுவின் பரிந்துரையை ஏற்று 15.5.1979 அன்று 'பொன்மொழி' நூலின் மீதான தடையை நீக்கி அரசு ஆணை பிறப்பித்தது. அப்போது எம்.ஜி.ஆர். தலைமை யிலான அ.இ.அ.தி.மு.க. ஆட்சி நடந்தது. ஆரியமாயை மீதான தடையை நீக்கி தி.மு.க. ஆட்சி அண்ணாவின் நூல்கள் அனைத்தை யும் அரசுடைமை ஆக்கியது.

(அடக்குமுறை வரலாறு தொடரும்)

**புரட்சிப் பெரியார் முழக்கம் வாசகர்களுக்கு...**

'புரட்சிப் பெரியார் முழக்கம்' சந்தா அனுப்பிய தோழர்களுக்கு - இதழ் ஒரு வார இடைவெளிக்குப் பிறகே கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறோம். சந்தா அனுப்பியவுடன் அடுத்த இதழ் உடனே கிடைக்கும் என்று தோழர்கள் எதிர்பார்ப்பு இயல்பானதே. ஆனால் சந்தா கிடைக்கப் பெற்று முகவரிப் பட்டியலில் இணைத்து சந்தாதாரருக்கு சென்றடைவதற்கு இடையில் ஒரு இதழுக்கான கால அவகாசம் தேவையாகிறது என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

சந்தா செலுத்திய பிறகு ஒரு இதழ்கூட கிடைக்கவில்லை என்றால் அது நிர்வாகத்தின் கோளாறு. உடனே அலுவலகத்துக்கு தெரியப்படுத்த வேண்டுகிறோம். இதழ் விட்டு விட்டு கிடைக்கவில்லை என்றால் அது உள்ளூர் அஞ்சலகத்தின் கோளாறு. அஞ்சலகத்திற்கு நேரில் சென்று ஒரு முறை புகார் அளித்தால் இந்த கோளாறை சரி செய்து விடலாம்.

இதழ் குறித்து தொடர்புக்கு:

9841 489896 (பொறுப்பாளர்)

9444 115133 (ஆசிரியர்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## சங்கிகளின் கேள்விகளுக்கு நெத்தியடி பதில் (3)

# காந்தியிலிருந்து கவுரி வரை கொலை செய்தது யார்?

ஒ. சுந்தரம்

*பெரியார் இயக்கத்தை நோக்கி சமூக வலைதளங்களில் பார்ப்பனிய-பார்ப்பனிய நேரடி - மறைமுக ஆதரவு சக்திகள் முன் வைத்து வரும் கேள்விகளுக்கு நெத்தியடி பதில்.*

**கேள்வி : நாட்டில் நடந்துள்ள கொலைகள், குண்டு வெடிப்புகள், கொள்ளைகள், ஹவாலா திருட்டுகள், இவற்றில் இந்துக்கள் பங்கு எவ்வளவு சதவிகிதம்? பிற மதத்தினரின் பங்கு எவ்வளவு சதவிகிதம் என்ற விவரங்கள் உங்களிடம் உண்டா? அதை மேடையில் பட்டியலிடும் துணிவு இருக்கிறதா?**

பதில் : தேசியக் குற்றப் புலனாய்வு ஆய்வு மையத்திடம் கேட்க வேண்டிய கேள்வியை உள் நோக்கத்துடன் எம்மிடம் கேட்கிறீர். சிறுபான்மை முஸ்லீமானவர்களை குறை சொல்லும், குற்றம் சாட்டும் உங்கள் காவி வண்ண எண்ணம் எமக்குப் புரியாமலில்லை.

கொலை, களவு, மோசடிக் குற்றங்களில் ஈடுபடுவோர் எவராயினும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. இவர்களுக்கு ஜாதி, மதம், கடவுள், இனம் என்ற பாகுபாடெல்லாம் இல்லை. ஏதாவது ஒரு பயன் நோக்கிச் செயல்படுவதே நோக்கமாய் கொண்டவர்கள்.

எனினும், பாபர் மசூதி இடிப்பு, குஜராத் கோத்ரா இரயில் எரிப்பு, மோடி அரசு குஜராத்தில் நடத்திய இனப் படுகொலை, ‘விஸ்கி புட்டிக்கு’ நாட்டின் இராணுவ இரகசியங்களை விற்றது, மராட்டியத்தில் பள்ளி வாசலுக்கு குண்டு வைத்து தகர்த்தது, சந்நியாசி வேடம் தரித்த பெண் நடத்திய குண்டு வெடிப்புச் சம்பவங்கள் முதற் கொண்டு அண்மையில் வங்கிகள் மூலம் நடத்தப்பட்ட வாராக் கடன் கொள்ளைகள், பங்கு மார்க்கெட் மல்லையா, ஹர்சத் மேத்தா வரை குற்றச் செயல்களில் ஈடுபட்டோர் யார் எவர் என்பதை நாடறியும். அதே நேரத்தில் எதிர் விளைவாக கோவை குண்டுவெடிப்புச் சம்பவங்களும் இடம் பெறாமல் இல்லை. இதிலே, குற்றச் செயல்களுக்கு, பயங்கர வாதங்களுக்கு சம்பந்தப்பட்ட நபர்களைத் தண்டிக்க வேண்டுமே தவிர, இவற்றை ஒட்டுமொத்த சிறுபான்மை மக்கள் மீதும் ஏற்றிச் சுமக்க வைக்கத் துணிவது காவி காலித்தனமாகும்.

காந்தியும், தபோல்கரும், கல்புர்கியும், பன்சாரேயும், கவுரி லங்கேசும் மார்பில் துப்பாக்கிக் குண்டுகளை ஏந்தி மரணமடைந்தார்களே, இதற்கு யார் காரணம்? உங்கள் நம்பிக்கைப்படி அவர்களும் இந்துக்கள் தானே? சொந்த மதத்துக்காரனையே இரத்தப் பலி கேட்கும் நீங்கள் பிறமதத்தினர் மீது குற்றம்சாட்ட என்ன யோக்கியதை இருக்கிறது?

**கேள்வி : இந்துக்களிடையே ஜாதி வெறியைத் தூண்டி பிரித்தாள நினைக்கும் ‘கருமர்களே’ (புரியவில்லை) பிற மத ஜாதி வேறுபாடுகளை மூடி மறைப்பது ஏன்? மேடையில் நா பேச நடுங்குவதேன்?**

பதில் : பெரியார் இயக்கத்தவர் ஜாதி ஒழிப்புப் போர் வீரர்களே தவிர, ஜாதி வெறியைத் தூண்டுபவர்கள் இல்லை. அனைவரும் ஜாதி மதச் சாக்கடையில் இருந்து விடுபட்டு, இன இழிவு நீங்கி, சுயமரியாதைச் சுகவாழ்வு வாழ்ந்திட வேண்டும் என்பதற்காகவே பெரியாரியக்கவாதிகள் போராடுகின்றனர்.

ஆரியப் பார்ப்பன வேத மதமாகக் கருதப்படும். இந்து மதக் கொடுமைகளில் இருந்து விடுதலை பெறுவதற்காகப் பல தலைமுறைகளுக்கு முன் மதம் மாறிய ‘இந்துக்களே’, சிறுபான்மை மக்கள். இதற்கு உதாரணமாக மீனாட்சிபுரம் மக்கள், தங்கள் இழிவைப் போக்கிக் கொள்ள, சக மனிதர்களுடன், சமமாய் நடத்தப்பட ஒட்டு மொத்தமாக இஸ்லாமிய மார்க்கத்தில் இணைந்த நிகழ்வு அது. இந்தியாவெங்கும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்திய இந்நிகழ்விற்குப் பின்னும் ஜாதிக் கொடுமைகள் நின்றபாடில்லை. இவற்றுக்கு மூல காரணமாக, மூளையாக இருந்து செயல்படும் ‘பிராமண வருணபேதம்’ ஒழிக்கப்படும் வரை இந்நிலை நீடிக்கவே செய்யும்.

பிற மதங்களுக்குச் சென்றாலும், ஏற்கனவே அங்கு உள்ள ஜாதிப் பெருமை கொண்டோரால், தாழ்த்தப்பட்ட மற்றும் இடைச்சாதி மக்கள், முன்பு இருந்த ஜாதி அமைப்பு முறையையே வைத்து, தாழ்த்தப்பட்ட கிறித்துவர் என ஒடுக்கப்படுகின்றனர். இது குறித்து மாற்று மதத் தலைவர்கள் அவ்வப்போது உரிய மாற்றங்களைச் செய்து வந்தாலும் அவை நிறைவடையவில்லை. போதுமானதாக இல்லை என்பது உண்மையே. எனவேதான், மதம் மாறுவதைக் காட்டிலும், மதம் மறுப்பதே உண்மையான சுயமரியாதைச் சுகவாழ்வைப் பெற்றத் தரும் என பெரியார் இயக்கத்தினர் பரப்புரை செய்து வருகின்றனர். இந்த முயற்சி தொடர்ந்து ஓயாது; தொடரும் - வெற்றி பெறும்!

சரி; இப்போது ஒரு கேள்வி. இந்த மதத்தில் ஜாதி இருப்பதால் தானே ஜாதிவெறி வருகிறது. அந்த இந்து மதத்தின் ஜாதியை நீங்கள் ஏன் எதிர்த்துப் பேசுவதில்லை? தலித் மக்கள் மீது பிற ஜாதியினரும் நடத்தும் அடக்குமுறைகளைக் கண்டித்து இந்துக்கள் மோதலாமா என்று ஏன் கேட்க முன் வரவில்லை? எங்கே போய் பதுங்கினீர்கள்?

**கேள்வி : சிவனும் இல்லை அல்லாவும் இல்லை, ஏசுவும் இல்லை என உங்கள் அறிவிப்புப் பலகையில் எழுத தைரியம் உள்ளதா?**

பதில் : பெரியார் இயக்கத்தின் பிரச்சாரமே, சுவர் எழுத்துப் பரப்புரை எனில் மிகையாகாது. காங்கிரஸ் ஆட்சி காலத்தில், எங்கள் சுவர் எழுத்து சுப்பையாவை தேடிக் கண்டுபிடித்து, கை விரலை வெட்ட வேண்டும் என மதவாதிகள் அலறும் வகையிலே அவர், மத மறுப்பு வாசகங்களை சுவர்களில் எழுதிப் போராடியவர். அவை தொகுக்கப்பட்டு உள்ளது. வாங்கிப் படித்து உண்மை அறிக.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், ஒருமுறை, ‘இந்து ஆத்திகம் என்பது உயர்வகுப்பாருக்கும், நாத்திகம் என்பது ஒடுக்கப்பட்ட மக்களுக்கானதாகவும் உள்ளது’ என்று பாராட்டினார்கள். அந்த அளவிற்கு மதவாதத்தை எதிர்த்துப் போராடி வரும் இயக்கம் பெரியார் இயக்கம். ஆகையால், இந்த மத மறுப்பு, கடவுள் மறுப்பு முழக்கங்களை அறிவிப்புப் பலகையில் அல்ல; நாடு முழுவதும் தெருவுக்குத் தெரு, முச்சந்திக்கு முச்சந்தி என எழுதி வைத்துப் போராடிய இயக்கம் பெரியாரியக்கம். இதற்குரிய தைரியமும், துணிச்சலும், கருத்தைக் கருத்தால் எதிர்கொள்ளும் ஆற்றலும் நிறைந்தவர்களே பெரியாரியக்கத்தினர் என்பதை அறிக. இப்போதும் பெரியார் சிலைகளின் கீழே ‘கடவுள் இல்லை; இல்லவே இல்லை’ என்ற வாசகம்தான் கம்பீரமாக நிற்கிறது; அது எல்லா மதக் கடவுள்களுக்கும் தான். புரிந்து கொள்க.

**கேள்வி : ‘இந்துக்கள்’ உருவாக்கி சிறப்பாக உலகளவில் செயலாற்றி வரும் டி.சி.எஸ்., இன்போசிஸ் போன்ற கம்பெனிகளில் தமிழன் வேண்டாம், திராவிடன் வேலை செய்யக் கூடாது என்று உங்களால் அறிக்கை வெளியிட முடியுமா? உங்கள் குடும்ப உறுப்பினரை அந்த வேலையிலிருந்து இராஜினாமா செய்ய வைக்க முடியுமா?**

பதில் : அதென்ன ‘இந்துக்கள்’ நிறுவனங்கள்? பார்ப்பனர் நிறுவனங்கள் என வெளிப்படையாய் கூற வேண்டியதுதானே! எங்கள் இளைஞர்களின் திறமையைக் கண்டு, கைகூப்பித் தொழுது பணி வழங்கிக் கொண்டிருக்கிறான் அமெரிக்கன்! பார்ப்பன நிறுவனங்களை எம்மவர் புறக்கணித்தால், அடுத்த நாள் ‘அவாள்’ தட்டேந்தித் தெருவில்தான் நிற்க வேண்டும். பெரும்பான்மை மக்களின் வரிப் பணத்தில் தண்ணீர், மின்சாரம், நிலம், கட்டமைப்பு எனப் பலப்பல வசதிகளைப் பெற்றுக் கொண்டு உருவாகிய நிறுவனங்களில், அந்தப் பெரும்பான்மை மக்கள் வேலை செய்வதில் என்ன தவறு? எம்மவரின் திறமையே பார்ப்பன நிறுவனங்களின் வளர்ச்சிக்குக் காரணம் என்பதை மறந்து விடாதீர்.

நீங்கள் கூறும் ‘இந்துக்கள்’ நடத்தும் நிறுவனங்கள் தங்கள் வர்த்தகச் சந்தை இந்துக்களுக்கு மட்டும்தான் அய்ரோப்பிய அமெரிக்க கிறித்தவர்களிடம் வர்த்தக உறவு கொள்ள மாட்டோம் என்று அறிவிக்குமா? அப்படி அறிவிக்கச் சொல்லி விட்டு, எங்களிடம் கேள்வி கேட்க வாருங்கள்!

**கேள்வி : பாம்பையும் பார்ப்பானையும் கண்டால் ‘பாம்பை விட்டுவிடு; பார்ப்பானைக் கொல்’ என்ற உங்களால், அந்தப் பாம்பை உங்கள் கழுத்தில் மாட்டிக் கொண்டு ஊர்வலம் வர முடியுமா?**

பதில்: முட்டாள்தனமான கேள்வி இது. ‘பாம்பையும் பார்ப்பானையும்..... கொல்’ என்று பெரியாரோ அல்லது பெரியார் இயக்கத் தலைவர்களோ எங்குமே சொன்னதில்லை. இது வடநாட்டில் வழங்கி வந்த கூற்றே தவிர, நாங்கள் கூறியதில்லை. பல்லில் விசமுள்ள பாம்பை ஏன் நாங்கள் கழுத்தில் அணிந்து திரிய வேண்டும்? ஆனால் ஒன்று, ‘பாம்புக்குப் பல்லில்தான் விசம்; பார்ப்பனருக்கு உடம்பெல்லாம் விசம்’ என்பதால், அத்தகைய பார்ப்பனரையே எதிர்கொண்டு வரும் எங்களுக்கு, பல்லில் விசம் உள்ள பாம்பைக் கண்டு அச்சமேற்படாது.

பாம்பையும் கடவுளாக்கி பாம்புப் புற்றுக்கு பால் ஊற்றி வணங்கும் மூடநம்பிக்கைகளின் புகலிடமான ஒரு மதத்திலிருந்து கொண்டு இப்படி அபத்தமான கேள்விகளைக் கேட்கக் கூடாது. சிவபெருமான் கழுத்தில் பாம்பைக் கட்டி வைத்திருப்பது உங்கள் மதம்தான். இந்தக் காட்டு மிராண்டித்தனத்தை கேள்வி கேட்பவர்கள் நாங்கள்!

**கேள்வி : குங்குமம் வைத்தவரை, நெற்றியில் என்ன காயம்? இரத்தம் வந்திருக்கிறதே என்று கேலி பேசியவர், வைணவத்தைப் பரப்பிய இராமானுஜரைப் பற்றி எழுதுவதை உங்களால் தட்டிக் கேட்க முடியுமா?**

பதில் : உமது கேள்வி, கலைஞர் ‘இராமானுஜர்’ தொடர் எழுதியதைத் தட்டிக் கேட்க முடியுமா என மையம் கொண்டு நிற்கிறது. ‘மதத்தில் புரட்சி செய்த மகான்’ ஆயிற்றே இராமானுஜர்! அவரை மக்களிடம் கொண்டு செல்ல, கலைஞர் - ‘நான் மானமிகு சுயமரியாதைக்காரன்’ என அறிவித்துக் கொண்டவர், எழுதியதில் என்ன தவறு?

இந்தியாவில் தோன்றிய மூன்று மதப் பெரியார்களான ஆதி சங்கரர், மத்வர், இராமானுஜர் ஆகியோர், இந்தியத் தத்துவ ஞானங்களாக முறையே அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம் என்பனவற்றைப் போதித்துப் பரப்பினர். அத்வைதத்திற்கு மறுப்பாக இராமானுஜர், மதத்தில் புரட்சி செய்து வசிஷ்டாத்வைதத்தைப் பரப்பினார். இவர், பார்ப்பன உயர்வகுப்பார் மட்டுமே குருமார்களாகவும், பூணூல் அணிந்த பூதேவர்களாகவும் ஆக முடியும் - பிறப்பால் தான் இது நடைபெறும் என்பதை உடைத்து, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் போதனைகள் செய்து, அவர்களை உயர்நெறியாளராக்கியவர். அக்காலகட்டத்தில் வைதிக மதத்தில் இதுவும் ஒரு கலகம்தான். இந்த வைதிக எதிர்ப்பு வரலாற்றை மக்களுக்கு எடுத்துக் கூறும் ஒரு முயற்சியே கலைஞர் எழுதிய இராமானுஜர்.

வைணவத்தில் இராமானுஜர் செய்த சீர்திருத்தத்திற்கு நேர்மாறாக வைணவப் பார்ப்பனர்கள் வர்ணாஸ்ரமத்தில் மூழ்கிக் கிடப்பதை எதிர்க்கும் திராணி உங்களுக்கு உண்டா? பதில் தேவை!

(அடுத்த இதழில் முடியும்)

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆9841489896

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 7th March 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN